# THE GAZETTE OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

**Part II of December 04, 2015**

**SUPPLEMENT**

(*Issued on 07. 12. 2015*)


## ABHIMANI SOCIAL DEVELOPMENT AND CULTURAL FOUNDATION (INCORPORATION)

(*Private Member's Bill)*

**A**

**BILL**

**to incorporate the Abhimani Social Development and Cultural Foundation**

*To be presented in Parliament by Hon. (Mrs.) Hirunika Premachandra, M. P. for Colombo District*


PRINTED AT THE DEPARTMENT OF GOVERNMENT PRINTING, SRI LANKA

TO BE PURCHASED AT THE GOVERNMENT PUBLICATIONS BUREAU, COLOMBO 5.

**Price : Rs. 8.00** **Postage : Rs. 10.00**

## அபிமானி சமூக அபிவிருத்தி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்)

## அபிமானி சமூக அபிவிருத்தி மற்றும் கலாசார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

“ அபிமானி சமூக அபிவிருத்தி மற்றும் கலாசார மன்றம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அமைப்பொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்க சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட அமைப்பானது எப்பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும் அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித் துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டமானது, 2016 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, அபிமானி சமூக அபிவிருத்தி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

அபிமானி சமூக அபிவிருத்தி மற்றும் கலாசார மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அபிமானி சமூக அபிவிருத்தி மற்றும் கலாசார மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோ ரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத் தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அபிமானி சமூக அபிவிருத்தி மற்றும் கலாசார மன்றம் என்ற பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அப்பெயர் கொண்டு

2-PL 009718-225 (2016/01)

அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் எப்பொதுக் குறிக்கோள்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளதோ அப்பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கை வாழ் இனங்களுக்கிடையில் சமாதானம், தூய எண்ணம், புரிந்துணர்வு மற்றும் ஒத்தாசை போன்றவற்றை வளர்த்தல் ;

(ஆ) பாடசாலை சிறுவர்களின் கல்வி, அறிவியல், சமய, கலாசார மற்றும் விஞ்ஞானம் தொடர்பான செயற்பாடுகளை மேம்படுத்தி அவற்றை நிலைப்படுத்துவதற்கு உதவுதல் ;

(இ) தேவையிலுள்ள பாடசாலையின் சிறுவர்களுக்குத் தமது கல்வியை தடையின்றித் தொடர்ந்து கற்றுச் செல்வதற்கும் ஒழுங்கு முறையாகப் பாடசாலைக்குச் சமுகமளிப்பதற்கும் அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பரிசில்கள், புலமைப்பரிசில் மற்றும் உதவிகள் வழங்குவதனூடாக அவர்களை ஊக்கப்படுத்தல் ;

(ஈ) பொருத்தமான மற்றும் தேவையிலுள்ள பாடசாலையின் சிறுவர்களுக்கு நலன்புரி சேவைகளை மேம்படுத்துவதனூடாக, பொருத்தமான அடிப்படையின் மூலம் அவர்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி சார் நிலைமைகளை மேம்படுத்தல் ;

(உ) இலங்கை வாழ் மக்களிடையே சமூக நெறிமுறைகள் தொடர்பான மனித உரிமைகள் மனித பிரமாணங்கள் மற்றும் அறிவு, அடிப்படைச் சுதந்திரம், சனநாயகம் மற்றும் உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்தி அவற்றைப் பாதுகாத்தல் ;

(ஊ) பொருத்தமான மற்றும் தேவையிலுள்ள பாடசாலையின் சிறுவர்களுக்கு எந்த இடையூறுமின்றி தமது கல்வியைத் தொடரச் செய்யும் நோக்கில் பொருத்தமான அடிப்படை மூலம் பரிசுகள், புலமைப்பரிசில் மற்றும் உதவிகள் அளித்தல் ;

(எ) தேவையிலுள்ள பாடசாலையின் உயர் கல்வியைத் தொடருகின்ற சிறுவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கல் மற்றும் ஏனைய சாத்தியமான வழிமுறைகள் மூலம் அவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக அவர்களை ஊக்குவித்து அவர்களின் ஆய்வுகளுக்கும் உதவியளித்தல் ;

(ஏ) பெண்கள், சிறுவர்களின் மற்றும் சமூகத்தில் இழிந்த நிலையிலுள்ள அங்கவீனர்கள் ஆகியோரின் மனநிலை மற்றும் பொருளாதார நிலைப்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் அவர்களை வலுப்படுத்துவதற்கான கருத்திட்டங்களை அமுல்படுத்துவதில் உதவுதல் ;

(ஐ) பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் மத்தியில் மனிதாபிமானம், விளையாட்டு, இலக்கியம், அழகியற் செயற்பாடுகள் மற்றும் ஆன்மீகம் சார்ந்த பண்புகளை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்தல் ;

(ஒ) கௌரவ பிக்குமார்களுக்கான உணவு வசதி, தங்குமிடம் மற்றும் விஹாரைகள் போன்றவற்றை வழங்குதல் மற்றும் அவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் ;

(ஓ) கௌரவத்திற்குரிய பிக்குமார்களின் பங்குபற்றலுடன் அன்னதானம், மத உபதேசம், வணக்கச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக சமூகத்தில் ஆன்மீக பண்புகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்;

(ஔ) அபிவிருத்தி கருதி நாடளாவிய ரீதியில் தகவல் தொழினுட்ப நிலையங்களை அமைத்து அவற்றை நடாத்திச் செல்லல் மற்றும் பாடசாலை மாணவர்களின்

விஞ்ஞான அறிவை மேம்படுத்துதல் மற்றும் அவர்களுக்கான கல்வி சார் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் ;

(க) உணவு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பொருத்தமானவர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமையினை மேம்படுத்துவதற்கு சுயதொழில் வாய்ப்பான மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்தல் ;

(ச) மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களுக்கு சமமான குறிக்கோள்கள் உள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புகளுடன் ஒத்துழைப்புடன் செயலாற்றுதல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் உள்ளடங்கலாக சங்கத்தின் யாப்பின் பிரகாரம் நியமிப்பதற்கான கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை ஒன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

(2) மன்றத்தின் முன்னாள் உறுப்பினரான வண. மாவரலே பத்திய தேரர் அவர்கள் நம்பிக்கையாளர் சபையின் ஆயுட்காலத் தவிசாளராதல் வேண்டுமென்பதுடன், தவிசாளர் கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும். அதன்பின்னர் சங்கைக்குரிய தேரர் அவர்களால் பெயர் குறிப்பிடப்படும் நபர் ஒருவர் சபையின் அடுத்த தவிசாளராக வருதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த நம்பிக்கையாளர் சபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) தவிசாளர் தவிர்ந்த பணிப்பாளர் சபையின் உறுப்பினர் ஒருவர், இறப்பினால் அல்லது பதவி விலகலால் முன்னதாகவே தமது பதவி வெற்றிடமானாலொழிய, நான்கு ஆண்டுகாலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும். இறப்பின் அல்லது பதவி விலகலின் காரணமாக பணிப்பாளர்கள் சபையில் வெற்றிட மொன்று ஏற்படுமிடத்து, பணிப்பாளர் சபையால் புதிய உறுப்பினர் ஒருவர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புதிய உறுப்பினர், முன்னிருந்த உறுப்பினரின் நான்கு ஆண்டு காலப்பகுதியில் எஞ்சிய காலத்திற்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.*

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும் பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப் பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தலும் மற்றும் உறுப்பினர்கள் செலுத்தவேண்டிய உறுப்புரிமைக் கட்டணமும், உறுப்பினர்களை அனுமதித்தலும் விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியை விட்டு விலகுதலும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும் பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறை கூட்ட நடப்பெண் மற்றும் அவர்களது தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்களும், தத்துவங்களும் கடமைகளும் மற்றும் பணிகளும் ;

(ஈ) பணிப்பாளர்கள் சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினராக வருவதற்கான தகைமைகள் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப் படற்பாலனவுமான கடன்கள்.

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடைகள் என்றவகையாக இதுகாலவரை அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லா பணங்களும் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கக்கூடியதொரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் கூறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம் என்பது.

**9.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஏதும் உடன்படிக்கையின்கீழ் அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுமுள்ள முழுத்தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்திற்காக அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு வருமதியாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்படவேண்டிய தொகையை விஞ்சுகின்றதான ஏதேனும் உதவுத்தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையுடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது கலைக்கப்படும்பட்சத்தில் அல்லது அதற்கு முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும், கணக்காய்வும்.

**12.** (1) பணிப்பாளர்கள் சபையானது கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டுச் செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் ஒருமுறையாவது பணிப்பாளர்கள் சபையால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரால் பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் அத்துடன் பணிப்பாளர்கள் சபையின் வேறு அலுவலர் ஒருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமூகமாயிருந்தமைக்கு அடையாளமாக தமது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் நியதிச்சபையின் அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது வேறெவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்

*Abhimani Social Development and Cultural Foundation (Incorporation)*

AN ACT TO INCORPORATE THE ABHIMANI SOCIAL DEVELOPMENT AND CULTURAL FOUNDATION

Preamble.

WHEREAS a Foundation called and known as the "Abhimani Social Development and Cultural Foundation" has heretofore been formed for the purpose of effectually carrying out and transacting all objects and matters connected with the said Foundation according to the rules agreed to by its members.

AND WHEREAS the said Foundation has heretofore successfully carried out and transcated the several objects and matters for which it was formed and has applied to be incorporated and it will be for the public advantage to grant such application:

BE it therefore enacted by the Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka as follows:–

Short title.

**1.** This Act may be cited as the Abhimani Social Development and Cultural Foundation (Incorporation) Act No. of 2016.

Incorporation of the Abhimani Social Development and Cultural Foundation.

**2.** From and after the date of commencement of this Act, such and so many persons as now are members of the "Abhimani Social Development and Cultural Foundation" (hereinafter referred to as the "Foundation") or shall hereafter be admitted as members of the Corporation hereby constituted shall be and become a body corporate (hereinafter referred to as the "Corporation") with perpetual succession under the name and style of the"Abhimani Social Development and Cultural Foundation" and by that name may sue and be sued in all courts, with full power and authority to have and use a common seal and alter the same at its pleasure.

The General objects of the Corporation.

**3.** The general objects for which the Corporation is constituted are hereby declared to be:–

2—PL 009719—225 (01/2016)

(*a*) To promote, peace, goodwill, understanding and cooperation among all communities of Sri Lanka;'

(*b*) To assist school children to develop and establish their educational, philosophical, religious, cultural and scientific activities;

(*c*) To give assistance, prizes and scholarships to needy school children to enable them to contitue their education without disturbances, and to encourage them to attend school regularly;

(*d*) To assist suitable and needy school children as the Foundation may deem fit, to improve their social, economical and educational status by promoting welfare;

(*e*) To promote and protect human rights, human values, and knowledge in social ethics, fundamental freedom, democracy and rights in Sri Lankan citizens;

(*f*) To give assistance, prizes and schoolarships as the Foundation may deem fit, to suitable and needy school children to continue their higher education without interuption;

(*g*) To assist and encourage needy school children who are following their higher education by awarding scholarships and in other suitable ways, to improve their education and for researches;

(*h*) To improve mental and economic status of women, children and the persons subjected to social discrimination and assist in the implementation of projects to empower them;

(*i*) To take steps to promote and encourage humanitation, sports, literature, aesthetic and spiritual activities among school children;

(*j*) To take steps to provide food, shelter, temples etc. to the venerable buddhist priests and for their development;

(*k*) To take steps for the spiritual development and improvement of the society by conducting programmes for alms giving, observing sil and meditation with the participation of venerable buddhist priests;

(*l*) To establish and maintain information technology centers island wide for the advancement and development of scientific knowledge of school children and conduct educational programmes for them;

(*m*) To arrange to implement and maintain self employment development projects to improve social and economic conditions of persons who need assistance;

(*n*) To liaise and coordinate with other local and foreign institutions which have similar objects;

Management of the affairs of the Corporation.

**4.** (1) The affairs of the Corporation shall subject to the other provisions of this Act and the rules in force for the time being of the Corporation be administered by a Board of Directors including the Chairman and Secretary, Treasurer elected in accordince with such rules;

(2) The founder member of the Foundation Reverend Mawarale Bhaddiya Thero shall be the Chairman of the Board of Directors for life and the Chairman shall be the Chief Executive Officer of the Corporation thereafter a

nominee by Reverend Mawarale Bhaddiya Thero shall be the Chairman of the Board of Directors.

(3) The first Board of Directors of the Corporation shall consist of the members of the Board of Administration of the Foundation holding office on the day immediately preceding the date of commencement of this Act.

(4) A member of the Board of Directors other than the Chairman shall, unless he vacates his office earlier by death or resignation, hold office for a period of four years. Where due to death or resignation a vacancy occurs in the Board of Directos a new member shall be appointed by the Board of Directors to fill such vacancy and such new member shall hold office for the remainder of such period of four years of his predecessor.

General powers of the Corporation.

**5.** Subject to the provisions of this Act and any other written law, the Corporation shall have the power to do, perform and execute all such acts, matters and things as are necessary or desirable for the promotion or furtherance of the objects of the Corporation or any one of them, including the power to open, operate and close bank accounts, to borrow or raise moneys with or without security, to receive or collect grants and donations and to engage, employ and dismisss servants required for the carrying out of the objects of the corporation.

Rules of the Corporation.

**6.** (1) it shall be lawful for the Corporation, from time to time at any General Meeting of the members and by votes of at least two-thirds of the members present and voting, to make rules, not inconstistent with the provisions of this Act, or any other written law, for all or any of the following matters;

(*a*) classification of membership, admission, withdrawal, expulsion or resignation of members and membership fees payable;

(*b*) procedure to be observed for the summoning and holding of meetings of the Corporation and of the Board of Directos, the quorum for such meetings and the exerscise and performance of their powers and duties;

(*c*) the appontment, powers, duties and functions of the various offices, agents and servants of the Corporation;

(*d*) qualifications required to become a member of the Corporation and of the Board of Directors; and

(*e*) the administration and management of the property of the Corporation.

(2) Any rule made by the Corporation may be altered, added to, amended or rescinded in like manner at a like meeting as a rule made under subsection (1).

(3) The members of the Corporation shall be subject to the rules of the Corporation.

Debts due by and payable to the Foundation.

**7.** All debts and liabilities of the Foundation existing on the day preceding the date of commencement of this Act, shall be paid by the Corporation hereby constituted and all debts due to subscriptions and contributions payable to the Foundation on that day shall be paid to the Corporation for the purpose of this Act.

Fund of the Corporation

**8.** (1) The corporation shall have its own fund and all moneys heretofore or hereafter to be received by way of gifts, bequest, donation, subscription, fees or grants for and on account of the Corporation shall be deposited to the credit of the Corporation in one or more banks as the Board of Directos shall determine.

(2) There shall be paid out of the fund, all sums of money required to defray and expenditure incurred by the Corporation in the exercise performance and discharge of its powers, duties and functions under this Act.

Corporation may hold property movable and immovable.

**9** The Corporation shall be able and capable in law to acquire and hold any prpoerty, movable or immovable which may become vested in it by virtue of any purchase, grant, lease, gift, testamentary disposition or otherwise and all such property shall be held by the Corporation for the purpose of this Act and subject to the rules in force for the time being of the Corporation, with full power to sell, mortgage, lease, exchange or otherwise dispose of the same.

Limitation of liabilities of members.

**10.** No member of the Corporation shall for the purpose of discharging the debts and liabilities of the Corporation for any other purpose, be liable to make any contribution exceeding the amount of such membership fees as may be due from him to the Corporation.

Property remaining on dissolution.

**11.** If upon the dissolution of the Corporation there remains, after the satisfaction of all its debts and liabilities any property whatsoever such property shall not be distributed among the members of Corporation, but shall be given or transferred to some other institution or institutions having objects similar to those of the Corporation and which, is or are by its rules prohibited from distributing an income or property among its members.

Audit and Accounts.

**12.** (1) The Board of Directors of the Corporation shall cause proper accounts to be kept of all moneys received and spent by the Corporation.

(2) The financial year of the of the Corporation shall be the calendar year.

(3) The accounts of the Corporation shall be examined and audited at least once in every year by an auditor or auditors appointed by the Board of Directors.

Seal of the Corporation.

**13.** The Seal of the Corporation shall not be affixed to any instrument whatsoever except in the presence of the Chairman and one member of the Board of Directors who shall sign their names to the instrument in token of their presnece and such signing shall be independent of the signing of any person as a witness.

Saving of the rights of the Republic and others.

**14.** Nothing contained in this Act shall prejudice or affect the rights of the Republic or of any body politic, or corporate or of any other persons except such as are mentioned in this Act and those claiming by, from or under them,

Sinhala text to prevail in case of inconsistency.

**15.** In the event of any inconsistency between the Sinhala and Tamil texts of this Act, the Sinhala text shall prevail.

Annual subscription of English Bills and Acts of the Parliament Rs. 885 (Local), Rs. 1,180 (Foreign), Payable to the SUPERINTENDENT, GOVERNMENT PUBLICATIONS BUREAU, DEPARTMENT OF GOVERNMENT INFORMATION, NO. 163, KIRULAPONA MAWATHA, POLHENGODA, COLOMBO 05 before 15th December each year in respect of the year following.